**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண். 03/2022**

**Deposition of witness of Plaintiff – P.W.2 (மாரிமுத்து)**

**18.03.2026**

**வாதி தரப்பு 2 வது சாட்சி மாரிமுத்து என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா கோவில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கோவில் புதுக்கோட்டை தேவஸ்தானத்தின் நிர்வாகத்திலும் உள்ளது என்றால் சரிதான். நான் வாதி கோவிலில் ஆலய மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறேன். வாதி கோவிலுக்கு மட்டும் தான் மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறேன்.

2. மேற்படி பணியை 17.10.2005 முதல் மேற்கொண்டு வருகிறேன். 17.10.2005 முதல் நாளது வரை ஆலய மேற்பார்வையாளராக தான் பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். வாதி கோவிலுக்கு அறங்காவலர்கள் உள்ளார்களா என்றால் ஏற்கனவே இருந்தனர், தற்போது இல்லை.

3. வழக்கு சம்மந்தமாக ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா சொத்தின் விஸ்தீரணம் 0.70.0 ஏர்ஸ் என்றால் சரிதான்.

4. தாவா சர்வே எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எங்களுக்கு கிடைத்த ஆவணங்களின் படி தனி நபர் பெயரில் தான் உள்ளது. தாவா சொத்து சம்மந்தமான நிலவுடைமை மேம்பாட்டு திட்ட ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

5. நிலவுடைமை மேம்பாட்டு திட்ட காலத்திலேயே தாவா சொத்து செல்லம்மாள் என்ற சுந்தரி பெயருக்கு பட்டா மாற்றப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து கோவில் சொத்தாகும். தவறுதலாக மாற்றப்பட்டுள்ளது. நாளது வரை செல்லம்மாள் என்ற சுந்தரி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் அதை எதிர்த்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதன் அடிப்படையில் தனிநபர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் தாவா சொத்தை கட்டியம் ஓதுவார் ஊழியத்திற்காக கொடுக்கப்பட்டது. நாளது வரை கட்டியம் ஓதுவார் ஊழியம் நடைமுறையில் உள்ளதா என்றால் இல்லை.

(2 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

**திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**